DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 396/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இருதயராஜ் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.பிச்சை |
| Village | : | செட்டியமடை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2 are absent U/s.317 Cr.P.C petitin filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.12.2023

---

**முதல் விசாரணை**

1. நான் செட்டியமடை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்,

2. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு நான் எனது வயலில் பருத்தி விவசாயம் செய்தேன், அதில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக உதயக்குமார் என்பரிடம் மிஷன் கேட்டிருந்தேன். அதன்பின் மிஷனை கொண்டு வந்து அடித்தோம்.

3. அப்போது இரவு 10 மணியளவில் மிஷின் நின்றுவிட்டது. அதன்பிறகு சாப்பிட்டு விட்டு வந்து அடிக்கலாம் என்று சொன்னார் . அப்போது எதிரிகள் என்னை தாறுமாறாக பேசிக்கொண்டு என்னை வெட்ட வந்தார்கள். எனக்கு தண்ணீர் பாய்ந்துக்கொண்டிருக்கிறது. எனக்கு பாய்ந்துவிட்ட பிறகு நீங்கள் மாறிக்கொள்ளங்கள் என்று சொன்னேன்.

4. எதிரிகள் எனக்கு தண்ணீர் விடமுடியாது என்று சொல்லி என்னை தாறுமாறாக அடித்து என்னை வாய்கக்காலில் தள்ளி என்னை அடித்து சாவுடா என்று சொல்லி கீழே தள்ளி விட்டார்கள். அதில் எனக்கு இடது காலிலும், தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது

5. அதன்பின்னர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் (அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) அதன்பிறகு இராமநாதபுரம் அரசு மருத்தவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். மேற்படி மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 05.03.2020 ம் தேதி புகார் அளித்தேன்.

2. எதிரிகள் வயலும் எங்கள் வயலும் பக்கத்து, பக்கத்து வயல் என்றால் சரிதான். எதிரிகள் வயலில் என்ன விவசாயம் செய்திருந்தர்கள் என்றால் பருத்தி செய்திருந்தார்கள்.

3. புகார்மனுவை யார் எழுதினார்கள் என்றால் எனது மகன் எனக்கு புகார் எழுதி கொடுத்தார். எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்ததா என்றால் இருந்தது.

4. இதுசம்பந்தமாக இதற்கு முன்பு காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்தேனா என்றால் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் புகார் அளிக்கவில்லை.

5. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது புகார் அளித்து அதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 396/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.புஷ்பம் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.இருதயராஜ் |
| Village | : | செட்டியமடை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2 are absent U/s.317 Cr.P.C petitin filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.12.2023

---

**முதல் விசாரணை**

1. நான் செட்டியமடை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எதிரிகளை தெரியும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்.

2. சுமார் மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு எனது கணவர் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். தண்ணீர் ஓடிய மிஷன் ஓடி நின்றுவிட்டது. அப்போது உதயக்குமார் என்பவரை வரச்சொன்னோம். அவர் சாப்பிட்டுவிட்டு வருவதாக சொன்னார். அப்போது எதிரிகள் வேறு மிஷினை கொண்டு வந்து வைத்தார்கள்.

3. இது ஓடிய பிறகு மிஷனை வையுங்கள் என்று சொன்னோம். அதற்கு அவர்கள் எதிரிகள் மது அருந்திவிட்டு எனது கணவரை தாக்கி விட்டார்கள். நான் ஓடி போய் தடுத்தபோது என்னையும் எதிரிகள் இருவரும் எனது முடியை பிடித்து அடித்து தள்ளிவிட்டார்கள்.

4. எதிரிகள் எனது கணவரை வாய்க்காலில் பிடித்து தள்ளிவிட்டார்கள் எனது கணவர் மல்லாக்க விழுந்துவிட்டார். அப்போது இரவு 12.00 மணியிருக்கும். நான் கத்தியவுடன் உதயக்குமார் ஓடிவந்து எங்களை தூக்கினார்.

5. அதில் எனது கணவருக்கு இரண்டு காலிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பின்னர் எனது கணவரை இராமநாதபுரம் அரசு மருத்தவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புகார் அளித்த தேதி எனக்கு நினைவில் இல்லை. சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்தேன். புகாரை நான் தான் எழுதி நான் தான் புகார் கொடுத்தேன், சம்பவம் இரவு 12.00 மணிக்கு நடைபெற்றது.

2. எதிரிகளும் நாங்களும் சிறு சிறு சண்டை காரணமாக பேசிக்கொள்ள

மாட்டோம். சம்பவம் நடந்த இடத்தில் நாங்களும் எதிரிகளும் மண்வெட்டி வைத்திருந்தோம். இரவு 12.00 மணி என்பதால் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். இருட்டில் முகம் தெரியாது என்றால் இல்லை ஆட்கள் தெரிந்தார்கள்.

3. மிஷின் போட்டு தண்ணீர் பாய்ச்சியது பொது வாய்க்கால் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் எங்களது பட்டா இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நாங்களும், எதிரிகளும் இருந்தார்கள் சத்தம் கேட்டு உதயக்குமார் என்பவர் வந்தார்.

4. சம்பவம் நடந்த உடனே புகார் அளிக்க காவல் நிலையம் சென்றோம் பின்னர் இராமநாதபுரம் மருத்துவமனைக்கு சென்றோம்.

5. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது அ.சா.1 பொய் புகார் அளித்து அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.